# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு, சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் மேற்கொண்டார்!









சென்னை,ஜூன்.27-

இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைத்தளப் பயிற்சியளிக்கவும், அவர்களின் சமூக வலைத்தளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும், தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர்- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார்.

அந்த வகையில், நேற்று,சென்னை தெற்கு, சென்னை வடக்கு, சென்னை மேற்கு மாவட்ட சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் எஸ்.ஜோயல் முன்னிலையில் நேர்காணல் செய்தார்.

அவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களைப் பார்வையிட்டு அவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

---

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# "அன்னம் தரும் அமுதகரம்" 127வது நாள்!

## திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை,ஜூன்.27-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 127 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (26.6.2025) திரு.வி.க நகர் வடக்கு பகுதி: 1) வட்டம் 71 பாரதி சாலை (வெள்ளையன் மார்க்கெட் அருகில்). 2) வட்டம் 74 அ சந்திர யோகி சமாதி சாலை சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.



இந்நிகழ்ச்சியில் சென்னை பெருகர மேயர் பிரியாராஜன், ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன். புனிதவதி எத்திராஜன், எம்.சரவணன், பி.உதயசங்கர், இரா.வீரமணி, நா.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், கா.ராஜ்முகமது, திரு.வி.க.நகர் வடக்கு / தெற்கு வட்ட கழக செயலாளர்கள்: பரிமளா சுரேஷ்பாபு, மா.ருத்ரமூர்த்தி, எம்.ஏ.டீக்கா, எம்.இசட். அபோய், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார், எம்.தமிம், பொல்லு டி.சுரேஷ்குமார், வி.க.வெங்கடேசன், எஸ்.சசிகுமார், பா.பி.தாஸ், எஸ்.வெங்கடேசன். இத்திட்ட ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, பெரம்பூர் ஆர். ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்..சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.




முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கான கருத்தரங்கம் புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் மாணவர் அணி அமைப்பாளர் கே.எஸ்.ச. இளையச் சூரியன் ஏற்பாட்டில் மாவட்ட கழக செயலாளர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில், மாநில மாணவர் அணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார் இந்நிகழ்ச்சியில் மாநில மாணவரணி துணைச் செயலாளர்கள் மண்ணை த.சோழராஜன் , வி.ஜி.கோகுல், மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ, கே.ஆர்.என்.போஸ், சுப. சரவணன், சு.சண்முகம், கீரை. தமிழ் ராஜா, பெ.ராஜேஸ்வரி, எஸ்.எஸ்.கருப்பையா, எம்.லியாகத் அலி, கே.எஸ். சந்திரன், மு.க.ராமகிருஷ்ணன், குளவாய்ப்பட்டி சி.சண்முகம், வே.ராஜேஸ், பா.சதீஷ்குமார், தெய்வானை, செ.பிரசன்னா, ராயல் சபா, வாகை அண்ணாத்துரை, ஆசிரியர் ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

---

### இ.கருணாநிதி-எஸ். ஆர்.ராஜா-ரஃபிக் அஹமது பங்கேற்பு !

# பம்மல் தெற்கு பகுதி கழக பாக முகவர்கள் ஆலோசனை- ஆய்வுக் கூட்டங்கள் !

## பகுதி கழகச் செயலாளர் வே. கருணாநிதி அறிக்கை !

சென்னை ஜூன்: 27

பம்மல் தெற்கு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்,பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பம்மல் தெற்கு பகுதியில் பாக முகவர்கள் ஆலோசனை மற்றும் ஆய்வுக்கூட்டம் காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர்-அமைச்சர் தா.மோ. அன்பரசன், வழிகாட்டலின் படி நாளை ( 28.6.2025 ) சனிக்கிழமை ( 29.6.2025 ) ஞாயிற்றுக் கிழமை பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் வட்டங்கள் வாரியாக ஒவ்வொரு பாகத்திலும் அந்த பாகத்தில் உள்ள பகுதிகளிலே நேரடியாக கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டங்களில் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம். எல்.ஏ, மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம். எல்.ஏ,பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் ரஃபி அஹமத் வருகை தந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ள புதிய உறுப்பினர் சேர்த்தல் 2026 சட்டமன்றத் தேர்தலில் ஒவ்வொரு பாகத்திலும் கழகத் தோழர்கள் எவ்வாறு பணியாற்றுவது என்பது குறித்து சிறப்புரை ஆற்ற உள்ளார்கள்.

எனவே அட்டவணையில் அறிவித்த உள்ளபடி (28-6 -2025) சனிக்கிழமை மாலை 05:00 மணி அளவில் 10வது வார்டு 380வது பாகத்தில் பாக முகவர்

எஸ்.சுலைமான் தலைமையில் வட்ட கழகச்

செயலாளர் எச்.முகமது அப்பாஸ் ஒருங்கிணைப்பாளர் ஏ.மதினா பேகம் எம்.சி.

6:00 மணிக்கு 7வது வார்டு 365ஆவது பாகத்தில் பாக முகவர் பி.பிரவீன் குமார் தலைமையில் வட்ட கழக செயலாளர் மு.இன்பசேகர் ஒருங்கிணைப்பாளர் என்.பன்னீர்செல்வம் ஏற்பாட்டில்.

7.00 மணிக்கு 5வது வார்டு 335வது பாகத்தில் பாக முகவர்

கிரி தலைமையில் வட்ட கழகச் செயலாளர் ஏ.அனிஸ்டன் ஒருங்கிணைப்பாளர் இ.வளர்மதி ஏற்பாட்டில்.

( 29.6 .2025) ஞாயிற்றுக் கிழமை காலை 09.00 மணிக்கு 8வது வார்டு 351 வது பாகத்தில் பாக முகவர்

எம்.முரளிதரன் தலைமையில் வட்டக்கழகச் செயலாளர் என்.காந்தி ஒருங்கிணைப்பாளர் சு.மனோகர் ஏற்பாட்டில்.

காலை 10.00 மணிக்கு 06வது வார்டு 342 வது பாகத்தில் பாக முகவர் எம்.ஜானகி தலைமையில் வட்ட கழகச் செயலாளர் வி.எஸ்.ஜெகநாதன் ஒருங்கிணைப்பாளர் பா.டில்லி ஏற்பாட்டில்.

காலை 11:00 மணிக்கு 7வது வார்டு 362 வது பாகத்தில் பாக முகவர் வ.தனசேகரன் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் மு.இன்பசேகர் ஒருங்கிணைப்பாளர் என். பன்னீர்செல்வம் ஏற்பாட்டில்.

மாலை 5:00 மணிக்கு 10வது வார்டு 326வது பாகத்தில் பாக முகவர் வி.அசோக் குமார் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் எச். முகமது அப்பாஸ் ஒருங்கிணைப்பாளர் சு.மனோகர் ஏற்பாட்டில்.

மாலை 06:00 மணிக்கு 8வது வார்டு 369வது பாகத்தில் பாக முகவர் இ.பாலசுப்பிரமணியம் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் என்காந்தி ஒருங்கிணைப்பாளர் சு.மனோகர் ஏற்பாட்டில்.

மாலை 07:00 மணிக்கு 10வது வார்டு 390வது பாகத்தில் பாக முகவர்

இ.சம்பத் தலைமையில் வட்டக் கழகச் செயலாளர் எச். முகமது அப்பாஸ் ஒருங்கிணைப்பாளர் ஏ.மதினா பேகம் எம்.சி.

இந்த அட்டவணைப்படி கூட்டங்கள் நடைபெற உள்ளன எனவே வட்டக் கழக செயலாளர்கள் ஒருங்கிணைப்பாளர்கள் இந்தக் கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திட வேண்டும் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒவ்வொரு பாகத்தில் அமைக்கப்பட்ட கழகத்தின் சார்பில் 10 பேர் இளைஞர் அணி 10 பேர் மகளிர் அணி 10 பேர் தகவல் தொழில்நுட்பத்தைச் சேர்ந்த ஒருவர் நூறு வாக்காளுக்கு ஒருவர் என தேர்வு செய்யப்பட்டவர்கள் அந்த பாகத்தில் உள்ள கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் துண்டு பிரசுரம் மூலமாக தகவல் தந்து அவர்கள் அனைவரும் அழைத்து கூட்டங்களில் 100 பேருக்கு குறையாமல் இருக்கும் வகையில் ஏற்பாடு செய்து நடத்திடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறன்

இவ்வாறு பகுதி கழக செயலாளர் பம்மல் வே.கருணாநிதி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை, தியாகராயர் நகரில், நேற்று (26.06.2025) தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 120–வது பிறந்தநாளை முன்னிட்டு அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், பி.கே. சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ் குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே. ராஜாராமன், ம.பொ.சி அவர்களின் குடும்பத்தினர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.